**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை—6**
**மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு, மார்ச் 2018**

**“சிறப்பு அனுமதி திட்டத்தின்” கீழ் தனித்தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல் குறித்த செய்திக் குறிப்பு**

மார்ச் 2018, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுத தேர்வுத்துறையால் அறிவிக்கப்பட்ட நாட்களுக்குள் ஆன்—லைனில் விண்ணப்பிக்கத் தவறி, தற்போது விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்களிடமிருந்து சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் ஆன்—லைனில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**ஆன்—லைனில் விண்ணப்பிக்க வேண்டிய தேதிகள்**

தனித்தேர்வர்கள் ஆன்—லைனில் விண்ணப்பிப்பதற்காக ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் அரசுத் தேர்வுத் துறை சேவை மையம் அமைக்கப்பட்டுள்ளது. தனித்தேர்வர்கள் தாங்கள் எந்த கல்வி மாவட்டத்திலிருந்து விண்ணப்பிக்கிறார்களோ, அந்த மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுத் துறை சேவை மையத்திற்கு
**17.01.2018 முதல் 19.01.2018 வரையிலான நாட்களில்** நேரில் சென்று ஆன்—லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுத் துறை சேவை மையங்களின் விவரத்தை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்துக் கொள்ளலாம்.

**விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள்**

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்று **(மாவட்டக் கல்வி அலுவலர் வாயிலாக பெற்ற இணைச்சான்றிதழ் (Equivalence Certificate) சமர்ப்பிக்கப்பட வேண்டும்)** ஓராண்டு இடைவெளியும், 01.04.2018 அன்று 15 ½ வயதும் பூர்த்தி அடைந்தவர்கள் “நேரடித் தனித்தேர்வர்களாக” (HP வகையினர்) விண்ணப்பிக்கலாம்.

2..

## தேர்வுக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை

| | |
|---|---|
| தேர்வுக் கட்டணம் | ரூ.150/– |
| இதரக் கட்டணம் | ரூ. 35/– |
| ஆன்–லைன் பதிவுக் கட்டணம் | ரூ. 50/– |
| **மொத்தம்** | **ரூ.235/–** |

இவற்றுடன் கூடுதலாக, சிறப்பு அனுமதி கட்டணமாக ரூ.1000/–ஐ பணமாக அரசுத் தேர்வுத் துறை சேவை மையத்தில் செலுத்த வேண்டும்.

தனித்தேர்வர்கள் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணத் தொகை Registration Slip –ல் குறிப்பிடப்பட்டிருக்கும்.

## அரசுத் தேர்வுத் துறை சேவை மையத்தில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1. உரிய தேர்வுக் கட்டணம் + சிறப்பு கட்டணம் ரூ.1000/– + ஆன்–லைன் பதிவு கட்டணம் ரூ.50/– ஆகியவற்றை சேவை மையங்களில் (Service Centre) பணமாகச் செலுத்த வேண்டும்.
2. பத்தாம் வகுப்பு அல்லது சமமான தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான அசல் மதிப்பெண் சான்றிதழ்.

   (அல்லது)

   பத்தாம் வகுப்பிற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான அசல் சான்றிதழ் **(அச்சான்றிதழ் பத்தாம் வகுப்பிற்கு இணையானததுதான் என்பதற்கான இணைச்சான்றிதழ் (Equivalence Certificate) கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.)**
3. பள்ளி மாற்றுச் சான்றிதழின் அசல்
4. இடப்பெயர்வு சான்றிதழ் அசல் (வெளி மாநிலத் தேர்வர்கள் மட்டும்)

## தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகள் விநியோகம்

தேர்வுக் கூட அனுமதிச் சீட்டுகள் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்ய வேண்டிய நாட்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

3..

இணையதளத்தில் வெளியிடப்பட்ட அறிவுரைகளின்படி (தேர்வுக் கட்டண விவரம் தவிர்த்து) வயது வரம்பு, கல்வித் தகுதி மற்றும் பாடங்கள் வகைப்பாடு அறிந்து அதன்படி விண்ணப்பிக்க வேண்டும்.

தனித்தேர்வர்களுக்குத் தற்போது வழங்கப்படும் அனுமதி முற்றிலும் தற்காலிகமானது எனவும், தனித்தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

ஒம்/–

**இயக்குநர்**

சென்னை–600 006

நாள்: 11 .01.2018